# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு

கதை தொகுப்பு

அடியேன்
கார்த்திகா சிவகுமார்





குருபரம்பரை ஹாரத்தில் எட்டாவதாக இருப்பவர் ஸ்ரீஇராமானுஜர் என்று பார்த்தோம் அல்லவா!. முதலில் ஸ்ரீமந்நாராயணன் பல அவதாரங்கள் எடுத்து நமக்கு நாம் நம் கர்மவினைகள், பாவங்கள் இவற்றை அனுபவித்து முடிவில் மோட்சம் அடைவது வரை கீதைகள் மூலம் உபதேசித்தார்.

இரண்டாவது நம் வாழ்க்கைக்கு ரிக், யஜீர், சாமம், அதர்வணம் வேதங்களைப் படைத்தார்.

மூன்றாவதாக அந்த வேதங்களை நல்ல முறையில் நாம் பயில சட்ட திட்டங்களை வகுத்துக் கொடுத்தார்.

நான்காவதாக ஆழ்வார்கள் மூலம் நம் நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களைக் கொடுத்தார். ஆனால், ஆழ்வார்கள் அவனது கல்யாண குணங்களை மட்டுமே அனுபவித்து அனுபவித்து அவனிடம் வைகுண்டபிராப்தி கேட்டு சென்றுவிட்டார்கள்.

ஐந்தாவது அந்த நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களையும், மனிதர்களின் அறியாமையை

போக்கி, புண்ணிய பாவங்களை அகற்றி, முக்தியடைய ஆச்சார்யார்கள் மூலம் விளக்கினால் தான் சரியாக வரும் என்று நித்யசூரிகளை பூலோகத்தில் ஆச்சார்யார்களாக அவதரிக்க அனுப்பி வைத்தார் பரந்தாமன்.

இப்போது அந்த ஆச்சார்யார்களுக்கு சரியான சீடன், அவர்கள் வகுத்துக் கொடுத்த சட்ட, திட்டங்களை பூலோகத்தில் பரப்புதல், வைஷ்ணவக் கொள்கைகளை எளிய முறையில் பரப்புதல், பக்திக்கு இலக்கணமாக வாழ்தல், சரணாகதி தத்துவமே போதும், கைங்கரியம் ஒன்றே போதும் நம் கர்மவினைகள் அனைத்தும் ஒழிந்து முடிவில் மோட்சம் கிடைக்கும் என்று, கைங்கரியம் ஒன்றையே குறிக்கோளாக வாழ ஒரு மனிதரைப் படைக்க வேண்டும் என்று ஸ்ரீமந்நாராயணனான பரம்பொருள் எண்ணினார்.

வைகுண்டத்தில் இருக்கும் ஆதிசேஷனிடம் நான் நின்றால், நடந்தால், அமர்ந்தால், குடையாக, சிம்மாசனமாக இருக்கும் தாம் தான் இப்பூலோகத்தில் அவதரித்து கைங்கரியத்தின் சிறப்பை உணர்த்தி, மக்கள் தாங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை, கர்மவினை பலன்களை அனைத்திலிருந்தும் விடுபட்டு, புனரபி ஜனனம் - புனரபி மரணம் இதிலிருந்து மீள அவர்களுக்கு மறுபிறவி இல்லாத நிலை, மோட்சம் பற்றி எடுத்துக்கூறி நல்வழிப்படுத்த அவதரிக்கும் நேரம் வந்துவிட்டது என்று கூறினார்.

ஆதிசேஷனும் இறைவனிடம் தாங்கள் கூறுவதையே செய்கிறேன் என்கிறார்.

✿✿✿ பார்த்தசாரதி திருக்கோவிலில் வழிபாடு :-

சற்றேறக்குறைய ஆயிரத்தோரு ஆண்டுகளுக்கு முன், ஸ்ரீபெரும்புத்தூர் கிராமமே மகிழ்ச்சியில் மூழ்கிக் கிடந்தது. அவ்வூரில் ஒரு பெரிய பெருமாள் கோவில்... சுவாமியின் திருநாமம் ஆதிகேசவப் பெருமாள், அந்த ஊரில் வசித்தவர் அசூரிகேசவாச்சாரியார். இவர் வேள்வி செய்வதில் வல்லவர். அதாவது எந்த வேள்வியாக இருந்தாலும் அதைச் சிறப்பாகச் செய்வார். இவருக்கு 'ஸர்வக்ரது' என்ற பட்டத்தை வேதபண்டிதர்கள் வழங்கினர்.

இந்த 'ஸர்வக்ரது' என்ற சொல்லுக்கு எல்லா வேள்விகளும் செய்பவர் என்று பொருள். இக்காரணத்தால் இவரை 'ஸ்ரீமத் அசூரி ஸர்வக்ரது கேசவ தீட்சிதர்' என்று மக்கள் அழைத்தனர். இந்த சமயத்தில் தான் மணக்கால் நம்பியின் சீடரான ஆளவந்தார் என்ற யமுனாச்சாரியார் தான் ஆட்சி செய்த ராஜ்ய பரிபாலனத்தை விட்டுவிட்டு, ஸ்ரீரங்கத்தில் வந்து துறவியாக மாறிவிட்டார்.

அவரது சீடர் பெரியநம்பி. நாத்திகர் கூட அவரது பாடல்களைப் படித்தால் பரவசத்தின் உச்சிக்குச் சென்று விடுவார்கள். என்ற இந்த இனிமையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆளவந்தாரிடம் பெரிய திருமலை நம்பி என்பவரும் சீடராக இருந்தார். ஆளவந்தாரை விட பெரிய திருமலைநம்பிக்கு வயது அதிகம். ஆனாலும், பெரிய திருமலைநம்பி ஆளவந்தாரை குருவாக ஏற்றுக் கொண்டார்.

பெரிய திருமலைநம்பிக்கு காந்திமதி, தீப்திமதி என்று இரண்டு தங்கைகள் இருந்தனர். அவர்களில் பெரிய தங்கை காந்திமதியை, ஸர்வசக்ரது பட்டம் பெற்ற அசூரி

கேசவாச்சாரியாருக்கு திருமணம் செய்து கொடுத்தார். தீப்திமதியை அகரம் என்ற கிராமத்தில் வசித்த கலைநயனப்பட்டர் என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். இவர்கள் இருவரின் திருமணத்தையும் சிறப்பாக நடத்திய பெ.பிய திருமலைநம்பி, எந்நேரமும் ஸ்ரீமந்நாராயணனின் திருவடியை மனதில் நினைத்துக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்து இருந்தார்.

அசூர் கேசவாச்சாரியாரும், காந்திமதியும் இல்லற வாழ்க்கையை நீண்டகாலம் மகிழ்ச்சியாகக் கழித்தனர். ஆனால், இவர்களுக்கு குழந்தை பாக்கியம் என்ற செல்வம் இல்லாது போயிற்று. எந்தக் குறையாக இருந்தாலும் தெய்வத்திடம் போனால் மனக்குறைகள் தீரும். இவர்கள் இருவரும் எந்தத் திருக்கோவில் போகலாம், அதிலும் இவர் வேள்விகள் சிறப்பாகச் செய்பவர் அல்லவா! இவர் "விருந்தாரண்யம் என்று அழைக்கப்பட்ட புண்ணிய ஷேத்திரமான அருள்மிகு பார்த்தசாரதி பெருமாள் திருக்கோவிலுக்குச் சென்றனர். திருஅல்லிக்கேணி குளத்தின் பெயரே ஊருக்கும் வந்துவிட்டது. அங்கு சென்ற அவர்கள் மகப்பேறு குறித்து வேள்வியை நடத்தினார்கள். யாகம் முடிந்தபின், அசூரி கேசவாச்சாரியாருக்கு தூக்கம் வர கோவிலிலேயே தூங்கி விட்டார். அப்போது அவரது கனவில் வந்த பார்த்தசாரதி பெருமாள், கேசவா! நீர் ஒழுக்கசீலர், வேள்விகள் இயற்றி என்னைத் திருப்தி செய்பவர், உமது பக்தி ஆழமானது. இனி குழந்தை இல்லை என்ற கவலை உமக்கு இல்லை. நானே உனக்கு குழந்தையாகப் பிறப்பேன். இவ்வுலக மக்கள் பூர்வாச்சாரியார்கள் அருளிய உபதேசங்களின் மகிமைகளைப் புரியாமல், தங்களையே உயர்வாக எண்ணிக் கொண்டுள்ளனர். அகந்தை கொண்டு பல தீமைகள் புரிகிறார்கள். எனவே, அவர்களைக் கடைத்தேற்ற நான் அவதாரம் எடுப்பேன். இனி நீர் ஊர் திரும்பலாம் என்றார் அந்த பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணன். இதைக்கண்டு விழித்த அசூரி கேசவாச்சார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. காந்திமதியும் இதைக்கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். இருவரும் தங்கள் ஊரான ஸ்ரீபெரும்புத்தூருக்குச் சென்றார்கள்.

✿✿ அவதாரம் :-

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோவிலுக்குச் சென்று வந்தபின், ஓராண்டு கழிந்தது. காந்திமதி கருவுற்றார். கலியுகம் 4118, ஆங்கில ஆண்டு 1017, (கி.பி.04/04/1017) சித்திரை மாதம் 12ம் தேதி, வியாழக்கிழமை, திருவாதிரை நட்சத்திரம், வளர்பிறை பஞ்சமியன்று அவதரித்தது அந்தத் தெய்வக்குழந்தை. காந்திமதியின் தங்கையான தீப்திமதியும் தன்னுடைய குழந்தையுடன் அக்காவைப் பார்க்க வந்திருந்தார். அவர்கள் இருவருக்கும் ஆண் குழந்தை பிறந்தது பரம சந்தோசம் என்று, பெரிய திருமலைநம்பிகள் ஸ்ரீபெரும்புத்தூர் வந்தார்.

பெரிய திருமலைநம்பிகள் காந்திமதியின் குழந்தையைப் பார்த்தார். அவருக்கு எளிதில் புரிந்துவிட்டது. குழந்தை பிறந்து பன்னிரெண்டாவது நாள் பெயர் சூட்டும் விழா நடத்தினார்கள். காந்திமதியின் குழந்தை 'லட்சுமணனின் அவதாரம்' என்பது புரிந்தது. பிறந்த குழந்தையின் தெய்வீகப் பொழிவு கண்டு வாழ்த்தி "லக்ஷ்மணோ லக்ஷ்மீ ஸம்பந்த!!" (திருநிறைச்செல்வன் தெய்வ மகன் இலட்சுமணன்) என்ற பெயருக்கு ஏற்ப, 'இளையாழ்வான்' என்று பெயர் வைத்தார். இளையாழ்வான் என்றால் இராமனுக்கு இளையவன் என்று பொருள்.

"அனந்த: பிரதமம் ரூபம் லக்ஷ்மணச்ச அத:பரம்
பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ கச்சித் பவஷ்யதி"

என்பது ஆன்றோர் வாக்கு. திருமாலின் ஐம்படைகளின் (பஞ்ச ஆயுதங்களின்) அவதாரம் தான் இளையாழ்வான் என்றும் சொல்வார்கள்.

திருமலையிலிருந்து வந்து மருமகனுக்குப் பெயர் வைத்தவரோ சாமானியரான மனிதர் அல்ல. அக்காலத்திலேயே ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவ பரமாச்சாரியாருள் அருமைச் சிஷ்யர்களுள் ஒருவர்.

தீப்திமதியின் குழந்தைக்கு கோவிந்தன் என்று பெயரிட்டார். தீப்திமதி சில காலம் கழித்து மற்றொரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்த குழந்தைக்கு சிறிய கோவிந்தப் பெருமாள் என்று பெயரிட்டார் பெரிய திருமலைநம்பிகள்.

குழந்தைகள் பிறந்து நான்கு மாதம் கழித்து சூரியனைப் பார்த்தல் என்னும் சடங்கு செய்தார்கள். இராமானுனுக்கும், கோவிந்தனுக்கும் இந்த சடங்கு நடந்தது. பிறகு முதல் சோறு ஊட்டுதல், மொட்டை அடித்தல், காது குத்துதல், உபநயனம் என்று வரிசையாகச் சடங்குகள் நடத்தப்பட்டன.

நெடுநாள் பிள்ளைப் பேறின்றி இருந்த அசூரிகேசவாச்சாரியார், தன் பிள்ளைக்கு உரிய காலத்தில் உபநயாதிகளைச் செய்து அந்தணன் சிறுவன் பெற வேண்டிய தகுதிகளை இளையாழ்வானுக்கு செய்தார்.

இளையாழ்வானுக்கு இளம் வயதிலேயே கல்வியின் மீது ஆர்வம். நன்றாகப் பயின்றார், இறைவன் மீது கொண்ட அன்பும் தானாகவே வளர்ந்தது. வேதம் ஓதி முடித்த இளையாழ்வான், தத்துவ நாட்டத்துடன், காஞ்சிபுரத்திற்கு அருகே உள்ள திருப்புட்குழி எனும் ஊரில் புகழ்பெற்ற ஆசிரியர் யாதவப் பிரகாசரிடம் வேதாந்தம் பயிலச் சென்றார். கோவிந்தனும் பயிலச் சென்றார்.

யாதவப் பிரகாசரோ அத்வைதம் கற்பிப்பவர். இளையாழ்வானுக்கு இறைவனுக்கு திருமுகம் உண்டு, அனைத்து கல்யாண குணங்களும் உண்டு என்பவர். இவரிடம் ஏன் அசூரி கேசவாச்சாரியார் வேதம் பயில அனுப்பி வைத்தார் என்றால், அப்பொழுது தான் உண்மையான பரம்பொருள் யார் என்பதையும், பிரம்மம் எப்படிப்பட்டது என்பதையும் நன்றாக உணர முடியும்.

எந்த ஒரு நல்ல விசயம் தெரிந்து கொள்ளும் போதும், அதற்கு மாற்றுக்கருத்து யாரேனும் சொன்னால் அது உண்மையாக இருந்தால் ஏற்றுக் கொள்வோம். தவறாகக் கூறினால்

வாதம் புரிந்தாவது உண்மையை நிலை நாட்ட முயற்சிப்போம் அல்லவா.

✿✿ குருகுலம் :-

யாதவப்பிரகாசர் : தைத்திரிய உபநிஷத்தில் "ஸத்யம், ஞானம், அனந்தம், பிரஹ்ம" என்ற முக்கியமான வாக்கியத்திற்கு அதிலுள்ள சொற்கள் பிரம்மம் ஒன்றையே பொருளாகக் கொண்டவை. பிரம்மம் ஒன்று தான். அதற்கு சொரூபம் இல்லை. அதனைப் பார்க்க முடியாது.

இளையாழ்வான் : பிரஹ்மத்தின் ஸ்வரூப குணங்களைச் சொல்கிறேன்.

யாதவப்பிரகாசர் : சொல்வீர்

இளையாழ்வான் : ஒரே மலருக்கு செம்மை, மென்மை, மணம், வடிவழகு, நிறை என்ற பல குணங்கள் இருக்கலாம். குணங்களின் இப்பன்மை அவற்றையுடைய மலரின் ஒருமைக்கு முரண் அல்ல. அதேபோல் பிரஹ்மம் ஒன்றே என்பதில் யாதொரு தட்டும் இல்லை என்பது என் விளக்கம்.

விளக்கம் :-

அதாவது யாதவப்பிரகாசர் சொல்வது, "பிரஹ்மம் ஒன்று தான்" அதைப்பார்க்க முடியாது என்பது. இது அத்வைதத்தில் உள்ளவை. ஏன் என்றால்? இராமானுஜர் அவதரிக்கும் 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். அவர் ஒருசமயம் பூ பறிக்கச் செல்லும் பொழுது, ஒன்று, ஒன்று, ஒன்று என்று வரிசையாகச் சொல்லி பூ பறித்தார்.

ஒன்று, இரண்டு என்று தானே சொல்ல வேண்டும்? ஏன் ஒன்று ஒன்று என்கிறாய் என்று ஆதிசங்கரரின் அன்னை கேட்க தனக்கு அனைத்தும் ஒன்றாகவே தெரிகிறது என்றார். இதன் அடிப்படையில் தான் அத்வைதம் உண்டானது.

இங்கே இளையாழ்வான் சொல்வது, ஏன் இராமானுஜர் பெயரைச் சொல்லாமல் இளையாழ்வான் என்று சொல்கிறேன் என்கிறீர்களா? இராமானுஜருக்கு இன்னும் அந்தப்பேர் வரவில்லை. அது வரும் போது சொல்கிறேன். எப்படி வந்தது என்று.

இப்போ இளையாழ்வான் சொல்கிறார், பிரஹ்மத்திற்கு சொரூபம் உண்டு. அதைப் பார்க்கலாம். விக்கிரங்களாகப் பார்க்கலாம். அதற்கு வடிவழகு உண்டு. அதற்கு கல்யாண குணங்கள் உண்டு என்று பெருமாளின் கல்யாண குணங்களையும், விக்கிரக சொரூபங்களையும் விரிவாக எடுத்துக் கூறினார். விசிஷ்டாத்வைதம் - விசிஷ்டு என்றால் உள்ளது என்று பொருள். பிரம்மத்திற்கு சொரூபம் உண்டு என்பதை இங்கே நிரூபித்தார் இளையாழ்வான்.

இளையாழ்வானின் அறிவுக்கூர்மை, ரஸிக உள்ளம், நாவனமை கண்ட யாதவப்பிரகாசரின் மனதில் புயலைக் கிளப்பியது. முன்னோர் பலரது வரட்டுத் தத்துவ வாதங்கள் இவரது வனப்பு வேதாந்த விளக்கங்களால் தவிடுபொடியாகிவிடும் என்று யோசித்தார் யாதவப்பிரகாசர்.

✿✿ குருவை மிஞ்சிய சிஷ்யன் :-

சீடர்களுக்கு காலைநேரப் பாடங்களை போதித்த பின் எண்ணெய்க் குளியல் எடுக்க எண்ணினார். அந்தக்கால குருகுலவாசத்தில் சீடர்களே குருவுக்குத் தேவையான சின்னச் சின்னத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். குரு ஆணையிடுவார். சீடர்கள் மறுக்காமல் சிரம் மேற்கொண்டு செய்வர். எண்ணெய்க் குளியலுக்கு ஆச்சாரியாரின் பாதாதி கேசம் இளையாழ்வான் எண்ணெய் தேய்த்துவிட்டுக் கொண்டிருந்தார். இன்னொரு மாணவரும் உடனிருந்தார்.

மாணவன்: தேவரீர். இன்று காலையில் தாங்கள் நடத்திய பாடத்தில் பொருள் விளங்கிக்கொள்ள சற்றுக் கடினமாக உள்ளது.

யாதவபிரகாசர்: எந்தப் பாடம்?

மாணவன்: சந்தோக்ய உபநிடத்தில் ஆறாவது பகுதியில் வரும் ஏழாவது மந்திரம்.

யாதவபிரகாசர்: எங்கே அந்த மந்திரத்தை ஒருமுறை கூறு.

மாணவன்: தஸ்ய யதா கப்யாசம் புண்டரீக -மேவமக்ஷிணி

யாதவபிரகாசர்: இதில் உனக்கு என்ன சந்தேகம்?

மாணவன்: இதில் வரும் கப்யாசம் என்ற பதத்தின் பொருள் என்ன?

யாதவபிரகாசர்: கப்யாசம் என்ற சொல்லை கபி + ஆசாம் என்று பிரி. கபி என்றால்

குரங்கு என்று பொருள். ஆசாம் என்றால் பிருட்டபாகம். அதாவது குரங்கின் ஆசனவாயானது தாமரையைப் போல மலர்ந்திருக்கும். அப்படிப்பட்ட சிவந்த கண்களையுடைய மகாவிஷ்ணு என்று பொருள்.

இந்த விளக்கத்தை இளையாழ்வான் கேட்கிறார். அவருக்கு ஒரே அழுகை. எம்பெருமானுடைய கண்களை குரங்கின் பிருட்டபாகத்துடன் ஆச்சாரியார் உவமை கூறியவுடன் தாங்க முடியாத துக்கம் இளையாழ்வானுக்கு. அந்தத் துக்கம் கண்களில் கண்ணீராக உடைத்துக் கொண்டு வந்தது. அப்படிப் பீறிட்டுக் கொண்டு வந்த கண்ணீர் சூடாக ஆச்சாரியாரின் தொடையில் பட்டது. ஆச்சாரியார் நிமிர்ந்து பார்க்கிறார். எம்பெருமானின் மீது இருந்த மாளாத காதல் காரணமாக இளையாழ்வான் அழுதுகொண்டிருந்தார்.

யாதவபிரகாசர்: இளையாழ்வான் நான் அப்படி என்ன சொல்லி விட்டேன் என்று நீ அழுகிறாய் ?

இளையாழ்வான் : மன்னிக்க வேண்டும் குருவே. எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நித்ய கல்யாண குணங்களைக் கொண்டவன். எனவே அவனுடைய கண்களைக் குரங்கின் பிருட்டபாகத்துடன் தாங்கள் ஒப்பிட்டதை என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

யாதவபிரகாசர்: இது நான் கூறிய விளக்கமில்லை. வழி வழியாக பல ஆச்சாரியர்கள் கூறி வரும் விளக்கம். ஆதிசங்கரர் கூட இதற்கு இப்படித் தான் விளக்கமளிக்கிறார்.

இளையாழ்வான்: மற்றவர்கள் எப்படி வேண்டுமானாலும் விளக்கம் கூறட்டும். என் பிரபுவை நான் குறைத்து ஒப்பிட மாட்டேன்.

யாதவபிரகாசர்: அப்படி என்றால் இந்த செய்யுளுக்கு நீயே விளக்கம் கொடு.

இளையாழ்வான் : கப்யாசம் என்ற சொல்லை இப்படியும் பிரிக்கலாம். கம்+பீபதி+ஆசம். இதில் கப் என்றால் தண்ணீர் என்று பொருள். பிபதீ என்றால் குடித்தல் என்று பொருள். எனவே, இதனை "கம் ஜாலம் பிபதீ கபி: ஸுர்ய:" என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொண்டால் சூரியனால் மலர்ந்தது என்ற பொருள் வரும். எனவே, சூரியனால் மலரும் தாமரையைப் போன்ற கண்களை உடையவன் எம்பெருமான் என்ற அருமையான விளக்கம் கிடைக்கும்.
யாதவபிரகாசர்: உன் இலக்கண அறிவு பளிச்சிடுகிறது. என்றாலும் நீ அத்வைதத்தை மறுக்கிறாயோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இளையாழ்வான் : நான் அத்வைதத்தை மறுக்கவில்லை. சாஸ்திரத்திலுள்ள, வேதத்திலுள்ள உண்மையான ஒன்றைத்தான் சொன்னேன். மற்றவர்கள் வாய்க்கு வந்தபடி எல்லாவற்றையும் மறைபொருளாகக் கூறுகிறார்கள். நான் வேதத்தில் சொல்லப்படட்டுள்ளதையே இங்கு சொன்னேன் என்றார். அவ்வளவு தான். யாதவப்பிரகாசருக்கு கோவம் தலக்கேறிவிட்டது. அவரை தீர்த்துக்கட்டி முடித்துவிட வேண்டும் என்று எண்ணினார். அதற்கு ஒரு திட்டம் தீட்ட முடிவு செய்தார். இளையாழ்வானின் திருமண வைபவத்தைப் பற்றி அடுத்த பதிவில் பார்க்கலாம்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿